## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

## O.S.No. 274/2022

26.03.2026 வா.சா.1 திரு. அருண் பிரசாத்

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் வாதி நிறுவனத்தில் எந்த ஆண்டு முதல் பணியாற்றி வருகிறேன் என்றால் 2012 ஆண்டு முதல் பணி செய்கிறேன். தபசிலாக குறிப்பிட்டுள்ள சொத்தானது புஞ்சை நிலம் என்றால் சரிதான். வாதி கம்பெனி தபசில் சொத்திற்கு அருகில் உள்ள அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை எப்போது கிரையம் வாங்கினார்கள் என்றால் தெரியாது. வாதி கம்பெனி இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் கம்பெனி பணியாட்களை வேலை செய்ய அனுமதிக்காததால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
2. தபசில் சொத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். தபசில் சொத்தும், தபசில் சொத்தை ஒட்டியுள்ள சொத்துகளும் புஞ்சை நிலங்கள் என்றால் சரிதான். வாதி கம்பெனி கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்தை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். மேற்படி கிரைய பத்திரத்தில் நடைபாதையாக பயன்படுத்த வேண்டும் என்று தபசில் சொத்தை பொறுத்து குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.
3. தபசில் சொத்தை 2–ம் பிரதிவாதி செல்வராஜ், 1–ம் பிரதிவாதியிடம் இருந்து 04.02.2020 ம் தேதி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் தெரியாது. வழக்கை தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞருக்கு தகவல் நான் கொடுத்தேனா என்றால் கம்பெனி சார்பாக கொடுக்கப்பட்டுள்ளது. தபசில் சொத்தின் சர்வே வரைபடத்தை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தபசில் சொத்து 2–ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும் தபசில் சொத்தில் பாதை எதுவும் இல்லை என்றால் சரியல்ல.

4. நான் சொல்லும் பாதை எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. நீதிமன்ற ஆணையர் தபசில் இடத்தை பார்த்தார் என்றால் எனக்கு தெரியாது. வாதி கம்பெனி 2011ம் வருடம் கிரையம் வாங்கியதற்கு முன்பாக வாதி கம்பெனிக்கு கிரையம் கொடுத்த நபர்கள் அவர்கள் கிரையம் கொடுத்த சொத்தை எவ்வாறு அனுபவித்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். தபசில் சொத்து உட்பிரிவு செய்யப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும்.
5. தபசில் சொத்தின் பட்டாவில் 2–ம் பிரதிவாதி பெயர் உட்பட 9 நபர்களின் பெயர் உள்ளது என்றால் சரிதான். நான் பிராதில் சொல்லியுள்ளது போல் தபசில் சொத்தில் நடைபாதை இல்லை என்றால் சரியல்ல. 1–ம் பிரதிவாதியின் மீது காழ்புணர்ச்சியின் காரணமான வாதி நிறுவனத்தால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிராதில் சொல்லியுள்ள படி 24.06.2022ம் தேதி எந்த ஒரு சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.
6. நான் பிராதில் வசதி உரிமை கேட்டுள்ள பரிகாரம் எங்களுக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

MARIMUTHU R MUNIYASAMY

Deposition uploaded on 26.03.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.03.26 17:01:59 +0530

Principal District Munsif,
Tirunelveli.